# மமா / கம் / சரஸ்வதி மத்திய கல்லூரி புசல்லாவை தேசிய பாடசாலை

COVID 19 இடர் விடுமுறை கால ZOOM கற்றல் செயலட்டை - 3

காரணகாரிய தொடர்பு

தரம் - 5 பகுதி – 1 நேரம் - 40

**வழிகாட்டல் : திரு. G. லோகேஸ்வரன் - உதவி அதிபர்** SLPS iii , B-Com., PGDE

1) தரம் 5 புலமைபரிசில் பரிட்சைக்கு தோற்றிய தாரணி அதிகூடிய புள்ளிகளைப்பெற்று சித்தியடைந்தாள். இதற்கான காரணமாக அமைவது.

1. தாரணி ஆர்வத்துடன் கற்றமை
2. அதிகூடிய வினாக்களுக்கு சரியான விடையளித்தமை.
3. அதிக பயிற்சி வினாத்தாள்களை செய்தமை.

2) இரவில் மலர்ந்த பூக்களில் இருந்த அதிக வாசனை வீசுவதற்கான காரணமாக அமைவது.

1. சுற்றாடலை சுத்தமாக பேனுவதற்கு.
2. வண்டுகள், தேனீகளை விரட்டுவதற்கு.
3. வண்டுகளையும், தேனீகளையும் கவர்வதற்கு

3) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் உள்ள மக்கள் முகம் கொடுக்கும் பிரதானமான பிரச்சினையாக அமைவது.

1. தொழிலுக்கு செல்ல முடியாமை
2. தூயகுடி நீரை பெற்றுக்கொள்ள முடியாமை
3. பாடசாலைக்கு செல்ல முடியாமை

4) சுரேன் கொடிய தொற்று நோயால் பீடிக்கப்பட்டுள்ளார். இவரின் குடுப்பத்தார் உடனடியாக செய்ய வேண்டியது.

1. அவரை வீட்டை விட்டு வெளியே துரத்திவிடல்
2. வைத்தியரை அழைத்து வரச்செல்லல்
3. வீட்டினுள்ளே தனியான அறையில் இருக்கச் செய்தல்.

5) எனது வகுப்பில் உள்ள எல்லா ஆண் மாணவர்களும் உயரமாணவர்கள். துவாரகிஸான் உயரமானவன். எனின் துவாரகிஸான் எனது வகுப்பு மாணவன் என்பது.

1. எப்போதும் உண்மை 2. பெரும்பாலும் உண்மை 3. கூறமுடியாது

6) எனது நண்பர்கள் மூவரும் மாணவத்தலைவர்களாக தெரிவு செய்யப்பட்டார்கள். இதற்கான காரனமாக அமைவது

1. ஏனைய மாணவர்கள் முன்வராமை
2. சிறந்த தலைமைத்தவ பண்புகள் காணப்படுகின்றமை
3. நன்றாக படிக்கின்றமை

7) இன்று சந்தையில் கரட்டின் விலை மலிவாகா காணப்பட்டது. இதற்கு ஏதுவான காரணமாக அமைவது.

1. மக்கள் கரட்டை அதிகம் விரும்பகின்றமை.
2. கரட்டின் உற்பத்தி அதிகமாக காணப்படுகின்றமை.
3. கரட் அழகிய செம்மஞ்சள் நிறத்தில் காணப்படுகின்றமையால்.

8) நாம் தினமும் உடற்பயிற்சி செய்யவேண்டும் என்பதற்கு காணமாக அமைவது.

1. அழகிய தோற்றத்தை பெறுவதற்கு
2. நோய்க்காவிகளை பாதுகாப்பதற்கு
3. உடற்பாகங்கள் சுறுசுறுப்பாக இயங்குவதற்கு.

9) அன்றாடம் எமது உணவில் கீரை வகைகளை சேர்த்து உண்ண வேண்டும். இதற்கான பிரதானமான காரணமாக அமைவது.

1. கீரை மிகவும் சுவைமிக்க உணவாக காணப்படுவதால்.
2. மேனி அழகாக பராமரிப்பதற்கு.
3. நோய்களில் இருந்து எம்மை பாதுகாப்பதற்கு.

10) இன்று கடற்றொழிலாளர்களை கடலுக்குச்செல்ல வேண்டாமென வானிலை மத்திய நிலையத்தினால் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தது. இதற்கான காரணமாக அமைவது.

1. இன்று மீன்குஞ்சுகள் அதிகமாக நீந்தும் என்பதால்.
2. கடல் அலையின் வேகம் அதிகமாக காணப்படுவதால்.
3. கப்பல் தீப்பற்றி எரியும் என்பதால்.

11) வீட்டில் உள்ளஒவ்வொருவரும் தனித்தனி பற்றூரிகைகளை பயன்படுவதற்கான காரணம்.

1. எல்லோரும் ஒரே நேரத்தில் பல்துலக்குவதால் ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்கு.
2. பற்றூறிகைகள் அழகிய வர்ணங்களில் காணப்படுவதால்.
3. பற்றூரிகைகள் தனியாக பயன்படுத்தும் உபகரணம் என்பதால்.

12) ஒரு நாளை இரு வேளைகள் பற்துலக்க வேண்டும். என வைத்தியர்கள் கூறுவதற்கான பிரதான காரணமாக அமைவது.

1. பற்பசைகளின் விற்பனையை அதிகரிப்பதற்கு.
2. பற் சுகாதாரத்தை பேணுவதற்கு.
3. பற்றூரிகைகளின் பலம் இழந்து விடும் என்பதால்.

13) பாடசாலையில் தவணைபரீட்சை நிறைவுபெற்றதன் பின் விடுமுறை வழங்கப்படுவதற்கான பிரதான காரணமாக அமைவது.

1. உல்லாசப்பிரயாணங்கள் மேற்கொள்வதற்கு
2. கற்றவற்றை மறந்து விட்டு வருவதற்க்கு
3. கற்றவற்றை மீள சுயகற்றலில் ஈடுபடுவதற்கு

14) கோடைக்காலங்களில் ஐஜ்பழங்கள் அதிகமாக விற்பனையாகின்றன. இதற்கான பிரதான காரணமாக அமைவது.

1. வெயிலில் ஐஸ் வேகமாக கரையும் என்பதால்.
2. அதிகமான வெப்பமாக காணப்படுவதால்.
3. வெயிலில் ஐஸ் பழங்களின்உற்பத்தி குறைவாக காணப்படும் என்பதால்.

15) சிறுவயதில் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கொள்வது நல்ல பழக்கங்கமாகும். இதற்கு ஏதுவான காரணமாக அமைவது.

1. விளையாடமல் இருப்பதற்கு
2. சொற்களஞ்சியங்களை ஞாபகத்தில் இருத்திக் கொள்வதற்கு.
3. இலகுவில் மறந்து விடுவதற்கு.

*****